**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 57/2023**

**வாதி தரப்பு சாட்சி-1 கலிங்கன் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 25.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) 1ம் பிரதிவாதி செல்வம் தாவா சொத்து சம்பந்தமாக குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி செல்வத்தின் தகப்பனார் பெரியசாமி பெயரில்தான் பட்டா இருந்ததா என்றால் ஆமாம். பெரியசாமி குளித்தலை சார்பு நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெரியசாமி இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளான 1, 2 பிரதிவாதிகள் குளித்தலை சார்பு நீதிமன்ற வழக்கை தொடர்ந்து நடத்த ஆஜராகவில்லை என்றால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்த வழக்கு குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு ஆனது என்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கு பின்னிட்டு பெரியசாமியின் வாரிசுகள் புதிதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொத்துக்களை விற்பனை செய்தார்களா என்றால், பெரியசாமி உயிருடன் இருந்த போதே பெருமாள் கவுண்டர், இளமுருகு ஆகியோருக்கு விற்பனை செய்துவிட்டார்கள். அது தெரிந்துதான் நான் வழக்கு தாக்கல் செய்தேன்.

2) தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது. பெருமாள், வெங்கடாச்சலம் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். இளமுருகு மட்டும் இறந்துவிட்டார். எனக்கு குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு கிடைத்த பின்னிட்டு, அதை ரத்து செய்ய வேண்டும் என 1, 2 பிரதிவாதிகளும், தாவா சொத்தை கிரையம் பெற்றவர்களும் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் அதுபற்றி தெரியவில்லை. வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். இவ்வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் 5 அயிட்ட சொத்துக்களை காட்டியுள்ளேன். மேற்படி சொத்துக்களின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது. எங்கள் ஊரில் பண்ணை உள்ளதா என்றால் ஆத்தாம்பட்டியில் குதிரைக்காரன் பண்ணை உள்ளது. பண்ணைக்கு பாத்தியப்பட்ட தாவா 1ம் அயிட்ட சொத்தைதான் 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரியசாமி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

3) தாவா சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்றால் நல்லூர் கிராமத்தில் உள்ளது. ஆர்த்தாம்பட்டி நல்லூர் கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான். பண்ணை நிலத்தை அனுபவம் செய்வதற்காக 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரியசாமிக்கு அரசாங்கம் பட்டா வழங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா 3, 4 அயிட்ட சொத்துக்கள் ஆதியில் குன்னமரெட்டியாருக்கு பாத்தியப்பட்டதா என்றால் அதுபற்றி தெரியவில்லை. 09.10.1967 ம் தேதி குன்னமரெட்டியாரிடம் இருந்து பெரியசாமி கிரையம் பெற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அனைவரும் சேர்ந்துதான் கிரையம் வாங்கினோம். பெரியசாமி கிரையம் பெற்ற சொத்தை அனுபவம் செய்து வந்தாரா என்றால், கூட்டாகத்தான் அனுபவம் செய்தோம். உண்மையில் கூட்டாக கிரையம் வாங்கியிருந்தால் எனது பெயரம் கிரைய ஆவணத்தில் இருக்கும் என்றால் சரிதான், எவ்வாறு எழுதினார்கள் என்று தெரியவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் எனது பெயர் இருக்கிறதா என அதை வாங்கி பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினோம் என்றால் நீண்ட நாட்கள் ஆகிவிட்டது, ஞாபகமில்லை.

4) எந்த பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் குளித்தலையில்தான் பதிவு செய்யப்பட்டது. பத்திரம் பதிவு செய்த போது நானும் உடன் இருந்தேனா என்றால் இல்லை, நான் வீட்டில் இருந்தேன். கிரைய ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என தெரியுமா என்றால், பத்திரம் எழுதும் போது நான் போகவில்லை. கிரைய சொத்திற்கு யார் பெயரில் பட்டா கொடுத்தார்கள் என்றால் பெரியசாமி பெயருக்குத்தான் கொடுத்தார்கள். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கு என் பெயரையும் பட்டாவில் சேர்க்க வேண்டும் என வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. பெரியசாமி அவ்வாறு குன்னமரெட்டியாரிடம் கிரையம் பெற்ற சொத்தைதான் இளமுருகுக்கு விற்பனை செய்தாரா என்றால், இளமுருகு வாங்கிய விபரம் தெரியும், எந்த சொத்து என்று தெரியவில்லை. கருப்பண்ண கவுண்டர் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 4 ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை 23.08.1986 ல் பெரியசாமியிடம் இருந்து கருப்பண்ணகவுண்டர் விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.

5) எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் சரியாக தெரியவில்லை, சுமார் 40 வருடங்கள் இருக்கும். வெங்கடாச்சலம் எனது அண்ணன். வெங்கடாச்சலம் உயிருடன் இருக்கிறார். வெங்கடாச்சலத்திற்கு திருமணம் ஆகி 40 வருடங்கள் இருக்கும் என்றால் இருக்கும். வெங்கடாச்சலம், பெரியசாமி ஆகியோர் திருமணம் ஆகி தனித்தனியாக வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல. ஒன்றாகத்தான் வசிக்கிறார்கள், நான்தான் தனியாக வசிக்கிறேன். தற்போது இருவரும் தனித்தனியாக வசிக்கிறார்கள். அவர்களுக்கு குடும்ப

அட்டை ஒன்றாக உள்ளதா என்றால் தனித்தனியாக வைத்திருப்பார்கள், எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல.

6) தாவா சொத்துக்களில் 1ம் பிரதிவாதிதான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, நான்தான் செய்து வருகிறேன். எப்போதிலிருந்து அனுபவம் செய்கிறேன் என்றால், எனக்கு திருமணமான பின்னிட்டு அவரவர்கள் பிரித்து அனுபவம் செய்து வருகிறோம். சுமார் 35 வருடங்களாக தனித்தனியாக அனுபவித்து வருகிறோமா என்றால் ஆமாம். நான் சொல்வது போல நாங்கள் தனித்தனியாக பிரித்துக் கொண்ட பின்னிட்டு ஒருவர் சொத்தில் மற்றவருக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். நாங்கள் மூவரும் பிரித்துக் கொண்ட விபரத்தை தனித்தனியாக குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் அதுபற்றி தெரியவில்லை. பிரித்துவிட்ட பின்னிட்டு நான் தனியாக சொத்தை கிரையம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பெரியசாமி சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் வாங்கியுள்ளார். சொத்துக்களை தனித்தனியாக பிரித்துக் கொண்ட பின்னிட்டு எதற்காக பாகப்பிரிவினை கோரி குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்தேன் என்றால் நிலத்தை கிரையம் செய்து கொடுத்து விட்டதால் வழக்கு தாக்கல் செய்தேன்.

7) பெரியசாமி அதிகம் படித்தவர் அல்ல என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனக்கோ, என்னை சார்ந்தவர்களுக்கோ சேர்ந்தது அல்ல என்றும், 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பின்னிட்டு வாரிசு அடிப்படையில் 1, 2 ம் பிரதிவாதிகள்தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. செல்வத்தின் அனுபவத்தில் இருந்து தாவா சொத்தினை மீட்க முடியவில்லை என நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**